*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*13 10 2025 6.30*
*திங்கட்கிழமை மாலை*
*மாநிலச் செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. *சர்க்கரை ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*
2. *கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்த விசாரணையை சிபிஐ-க்கு மாற்றி உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*
3. *தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நான்கு நாட்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*
4. *மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*
5. *வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் உள்ளது.*

*<u>இனி விரிவான செய்திகள் -----</u>*

*சர்க்கரை ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.*

*கடந்த நிதியாண்டில் 7 லட்சத்து 75 ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>><><><><<

*புதிய குற்றவியல் சட்டங்கள் நீதி விரைவாக கிடைப்பதை உறுதி செய்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.*

*மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான கண்காட்சியை இன்று ஜெய்ப்பூரில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*விரிவான ஆலோசனைக்கு பிறகு இந்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கான சிறப்பு அம்சங்கள் சிறப்பு பிரிவுகளில் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.*

*21 ஆம் நூற்றாண்டின் முக்கிய நீதித்துறை சீர்திருத்த நடவடிக்கையாக இந்த புதிய குற்றவியல் சட்டங்கள் திகழ்கின்றன என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.*

>><><><><<

*கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பான விசாரணையை சிபிஐ-க்கு மாற்றி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், கரூர் சம்பவத்தில் தமது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றாத திமுக அரசு, தவெக - வுக்கு எதிராக வன்ம பிரச்சாரமும் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த நிலையில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் மூலம் இந்த சம்பவத்தில் உண்மை விரைவில் வெளி வரும் என்று அவர் கூறியுள்ளார்.*

*உயிரிழப்புக்கு காரணமானவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.*

*அஇஅதிமுகவும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை வரவேற்றுள்ளது.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, நியாயமான பாரபட்சமற்ற விசாரணை என்பது மக்களின் உரிமை என்ற அடிப்படையில் இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.*

*பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரனும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், இந்த சம்பவத்திற்கு சிபிஐ விசாரணை வேண்டும் என்ற தங்களது வலுவான கோரிக்கைக்கு செவி சாய்க்கும் வகையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதர்க குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த விசாரணையை கண்காணிப்பதற்காக உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு அஜய் ரஸ்தோகி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருப்பதும் வரவேற்கத்தக்கது என்று அவர் கூறியுள்ளார்.*

*இதன்மூலம் இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.*

*>><><><><<*

*தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நான்கு நாட்கள் நடைபெறும் என்று பேரவைத் தலைவர் திரு அப்பாவு அறிவித்துள்ளார்.*

*இன்று சென்னையில் தமது தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் – அப்பாவு - 47 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். (சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*நாகை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.*

*வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் மீனவ கிராமத்திலிருந்து 5 படகுகளில் மீன்பிடிக்க சென்றவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – செ.ஜெபராஜ் – 47 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

***மாவட்டச் செய்திகள்***

*கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.*

*---------------*

*மதுரை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பான பேரிடர் ஒத்திகை மற்றும் பயிற்சி முகாம் ஆட்சியர் திரு பிரவீன் குமார் தலைமையில் இன்று தெப்பக்குளம் பகுதியில் நடைபெற்றது.*

*---------------*

*வேலூர் மாவட்டத்தில் உரிய அனுமதியின்றி பட்டாசு விற்பனை செய்யப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி எச்சரித்துள்ளார்.*

*---------------*

*கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 6 வழித்தடங்களில் புதிய பேருந்து சேவையை ஆட்சியர் திரு தினேஷ் குமார் இன்று தொடங்கி வைத்தார்.*

*-------------*

*நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் சிறுநீரக மோசடியில் ஈடுபட்டது தொடர்பாக இரண்டு பேரை சிறப்பு புலனாய்வுக் குழுவினர் கைது செய்தனர்.*

*---------------*

*திருப்பூர் மாநகர காவல்துறை சார்பில் இணைய வழி குற்றங்களை தடுப்பதற்கான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.*

*---------------*

*விழுப்புரம் மாவட்டத்தில் தரமற்ற முறையில் இனிப்புகளை தயார் செய்த 15 கடைகளுக்கு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தனர்.*

*---------------*

*தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறும் என்று ஆட்சியர் திரு இளம்பகவத் தெரிவித்துள்ளார்.*

*------------*

*தெற்கு ரயில்வே கூடுதல் பொது மேலாளராக திரு விபின் குமார் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.*

-----------------

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் 87 லட்சம் ரூபாய் மதிப்பிலான சுற்றுலா வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி சிவ சவுந்திரவள்ளி இன்று தொடங்கி வைத்தார்.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

வெஸ்ட் இண்டீஸுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நான்காம் நாளான இன்று 2 விக்கெட் இழப்புக்கு 173 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 390 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

John Campbell 115 ரன்னுக்கும், Shai Hope 103 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

குல்தீப் யாதவ் மற்றும் பும்ரா தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

121 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் இரண்டாவது இன்னிங்சை ஆடிய இந்தியா ஆட்ட நேர இறுதியில் 1 விக்கெட் இழப்புக்கு 63 ரன் எடுத்துள்ளது.

கே எல் ராகுல் 25 ரன்னுடனும், சாய் சுதர்சன் 30 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

---------------

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Hmar Lalthazuala இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Vennala Kalagotla 15-1, 15-6 என்ற செட்கணக்கில் அயர்லாந்தின் Siofra Flynn -ஐ வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Keerthi Manchala – Vishnu Kedhar Kode இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

சீனாவின் Gansu -வுக்கு எதிரான முதலாவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா – ஏ அணி 7-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

>> End of News <<